## சமஸ்கிருத மொழி - உச்சரிப்பு மற்றும் எழுத்து இலக்கணம்

ஒரு மொழியைப், பிழையறப் பேசவும் எழுதவும், அம்மொழி வாயிலாக, எண்ணங்களை வெளிப்படுத்தப் பயன்படும் சாதனமாக இலக்கணம் விளங்குகிறது.

ஒரு மொழியின் இலக்கணம், அம்மொழியிலுள்ள எழுத்துக்களின் உச்சரிப்புக் களுக்கான மரபுகளை வகுத்துக் கொடுக்கிறது. அவற்றை முறையாகக் கற்க வேண்டும். எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கவில்லையென்றால் சொற்களின் பொருள் வேறுபடும். சில எழுத்துக்களின் உச்சரிப்புகளில் உள்ள நுண்ணிய வேறுபாடுகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு எழுத்தை உச்சரிப்பதற்கு, நாக்கு (Tongue), பற்கள் (Teeth), உதடுகள் (Labial) , உள்நாக்கு / தொண்டை (Guttural), மூக்கு (nasal), மூச்சு (aspiration), அண்ணம் (Palate) முதலிய அங்கங்களை நாம் உபயோகிக்கின்றோம்.. அண்ணம் என்பது, வாயில் அரைவட்டமாக உள்ள மேல் பகுதி. இந்த அண்ணத்தை மூன்று பகுதிகளாகக் கூறலாம். மேல் முன் பற்களுக்கு அருகில் உள்ளது நுனி அண்ணம் (Dental); அண்ணத்தின் இடைப்பகுதி நடு அண்ணம் (Cerebral); நடு அண்ணத்துக்கும் உள் நாக்குக்கும் இடைப்பட்ட அடி அண்ணம் (Palatal). இப்படி, அங்கங்களையும் தசைகளையும் மூச்சையும் இயக்கினால் இன்ன ஒலி வரும் என்று மொழி இலக்கணங்கள் சொல்லியுள்ளபடி உச்சரிப்புப் பயிற்சி பெறவேண்டும்.

சில மொழிகளில் பேச்சு மொழிக்கும், எழுத்து மொழிக்கும் சில மாறுபாடுகளை காணமுடியும். அதாவது, பேச்சு வழக்கில் உபயோகிக்கும் சொற்களில் உள்ள எழுத்துக்களின், ஒலி அமைப்பு, எழுத்து வடிவில் அதே அமைப்பில் இருப்பதில்லை. அத்தகைய ஒலி அமைப்பின் வேறுபாடுகள், சார்ந்திருக்கும் இடத்தால், வேறுபட்ட தாய் மொழிகளால், அல்லது வேறேதும் காரணங்களினால் கூட இருக்கலாம். ஆனால் இந்த வேறுபாடுகள், எழுத்து வடிவில், காணப்படுவதில்லை.

பேச்சு மொழிக்கும், எழுத்து மொழிக்கும் உள்ள மேற்கூறிய வேறுபாடுகள் , சமஸ்கிருத மொழியில், காணப்படுவது இல்லை என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சமஸ்கிருத மொழி விஞ்ஞான பூர்வமாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது அவர்கள் கருத்து. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில், சமஸ்கிருத மொழி பற்றிய ஆராய்ச்சியில் பல நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இந்த மொழியின் எழுத்து மற்றும் ஒலி அமைப்பானது, கணினி மென்பொருள் வடிவமைப்பிற்கு (Computer Software Development) ஏதுவாக உள்ளதாகக் கருதுகின்றனர்.

குறிப்பாக இப்பொழுது, மென்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ள, ஒலியிலிருந்து எழுத்து (Speech to Text) என்கின்ற ஒரு முயற்சிக்கு, சமஸ்கிருத மொழி, மிகவும் உகந்ததாகக் கருதப்படுகின்றது. கீழ்க்கண்ட காரணங்களுக்காக, ஆங்கில மொழியை அவர்களால் முழுவதுமாக உபயோகிக்க முடியவில்லை.

- உதாரணத்திற்கு, ஆங்கிலத்தில், code, colour என்ற சொற்களின் ஒலி அமைப்பை எழுத்து வடிவில் மாற்றும் பொழுது, “கோட்”, “கலர்” என்றே எழுத வேண்டும். அதாவது, இந்த இரண்டு சொற்களில் உள்ள “CO” என்ற எழுத்தானது, “கோ” மற்றும் “க” என்றே ஒலிக்கப்படும். இந்த வேறுபாட்டிற்க்கான விதிமுறைகள் அம்மொழியின் இலக்கணத்தில் காணப்படுவதில்லை.

- மேற்கூறிய உதாரணத்தில், colour என்ற சொல், ஆங்கிலேயர்களால் (British) பின்பற்றப்படும் அகராதியில், colour என்றும், அமெரிக்கர்களால் (American) பின்பற்றப்படும் அகராதியில், color என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்களுக்கும், அமெரிக்கர்களுக்கும், தாய் மொழி, ஆங்கிலம் தான் என்றாலும், இந்த வேறுபாடு, சார்ந்திருக்கும் இடத்தால் உண்டானது.

- ஒரே எழுத்துக்களை உடைய சொற்களை (உதாரணம் : Read), கடந்த காலத்தை குறிப்பிடும் பொழுது, “ரெட்” என்றும், நிகழ் காலத்தை குறிப்பிடும் பொழுது, “ரீட்” என்றும் உச்சரிக்கப்படுறது.

- வெவ்வேறு எழுத்துக்களை உடைய சொற்கள் (உதாரணம் : See மற்றும் sea), “சீவக சிந்தாமணி” என்ற சொல்லில் உள்ள “சீ” போல் உச்சரிக்கப்படுகிறது.

- ஒரு சொல்லில் உள்ள அனைத்து எழுத்துக்களும் உச்சரிக்கப்படு வதில்லை (உதாரணம் : Knock மற்றும் Knew) . இந்தச் சொற்கள் “நாக்“ மற்றும் “நியூ” என்றே உச்சரிக்கப்படுகின்றன. இந்தச் சொற்களில் உள்ள “k” என்ற எழுத்து உச்சரிக்கப்படுவதில்லை.

மேற்கூறிய இது போல் குறைகள் சமஸ்கிருத மொழியில் காணப்படுவதில்லை. மேலும் சமஸ்கிருத மொழியின் எழுத்துக்களை உச்சரிக்கும் பொழுது, நாக்கு, பற்கள், உதடுகள், உள்நாக்கு, அண்ணம் முதலிய அங்கங்களுடன் சுவாசமும் சீர்படுவதால், மேலை நாடுகளில், சில பள்ளிகளில், மாணவர்களின் உச்சரிப்புத் திறமைகளை

வளர்த்துக்கொள்ளவும், மேம்படுத்தவும், சமஸ்கிருத மொழிப் பயிற்சி, கட்டாயப் பாடமாக, வரையறுக்கப்பட்டுள்ளது.

- Philosophy Day School - New York
- St James School - London
- John Scottus School, Ireland

மேலும், 60 நாடுகளில் உள்ள 400க்கும் மேற்பட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களில், சமஸ்கிருத மொழியில் மேற்படிப்பு (Mphil) மற்றும் ஆய்வுற்கான (PhD) வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

- Harvard University
- Cambridge University
- Oxford University
- Edinburgh University
- London University
- Glasgow University
- Zurich University
- Trinity College, Ireland